00236

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 06

**EPU6230 –** ஆரம்பப் பிரிவு பாடசாலை அமைப்பில் உள்ளடங்கற் கல்வி

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- **22.06.2025** நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. உள்ளடங்கற் கல்வி என்ற எண்ணக்கருவை வரையறுத்து, அதை செயற்படுத்துவதற்கு உதவும் இரண்டு (02) சர்வதேச கொள்கைகளைக் குறிப்பிடுக.

2. கலைத்திட்ட இடமளிப்பு மற்றும் மாற்றியமைத்தல் (Curriculum accommodation and modification) ஆகிய பதங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

3. இயலாமைகள் உள்ள பிள்ளைகளை உள்ளடக்குவதற்கு உதவப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூன்று (03) வகையான உதவித் தொழிநுட்பங்களைப் (Assistive Technology) பட்டியலிட்டு விபரிக்குக.

4. ஒரு ஆசிரியராக, ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனமுள்ள (Autism Spectrum Disorder) ஒரு மாணவனுக்கு உதவும் வகையில் வகுப்பறைச் சூழலை திறம்பட மாற்றியமைக்கக்கூடிய இரண்டு (02) வழிகளைக் குறிப்பிடுக.

5. பாரம்பரிய ஆசிரியரின் வகிபங்கை உள்ளடங்கல் ஆசிரியரின் வகிபங்கோடு ஒப்பிட்டு, ஐந்து (05) முக்கிய விடயங்களின் கீழ் முன்னிலைப்படுத்துக.

6. வகுப்பறைச் செயற்பாடுகளில் அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் (ADHD) உள்ள ஒரு மாணவர்களுக்கு உதவுவதற்கான இரண்டு (02) உள்ளடங்கல் உத்திகளைப் பரிந்துரைக்குக.

7. கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பு (UDL) என்ற எண்ணக்கருவையும் உள்ளடங்கல் அமைப்பில் அதன் முக்கியத்துவத்தையும் விவரிக்குக.

8. இலங்கையில் உள்ளடங்கல் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இரண்டு (02) சவால்களைச் சுருக்கமாக ஆராய்க.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளின் முக்கிய அம்சங்களை விளக்குக.
(05 புள்ளிகள்)

**ii.** யுனெஸ்கோவின் அடிப்படையில் உள்ளடங்கற் கல்வியின் நான்கு (04) கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டுக.
(08 புள்ளிகள்)

**iii.** நீங்கள் குறிப்பிட்ட கொள்கைகள் ஒரு ஆரம்ப வகுப்பறையில் நடைமுறைகளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன. என்பதைப் பற்றி ஆராய்க.
(07 புள்ளிகள்)

10. **i.** புலன்சார் குறைபாடுகள் உள்ள மாணவர்களை ஆசிரியர்கள் எவ்வாறு அடையாளம் காணலாம் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
(05 புள்ளிகள்)

**ii.** ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனம் மற்றும் அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் உள்ள குழந்தைகளின் பண்புகளை விவரிக்குக.
(08 புள்ளிகள்)

**iii.** ஒரு முதன்மை ஆசிரியர், அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் உள்ள மாணவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை விளக்குக.
(07 புள்ளிகள்)

11. **i.** கலைத்திட்டத் தழுவல் (Curriculum Adaptation) என்ற பதத்தினை வரையறுத்து, அதனைச் செயற்படுத்தக்கூடிய வழிகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய **ஒன்பது** (09) வகையான கலைத்திட்டத் தழுவல்களைக் குறிப்பிடுக.
(07 புள்ளிகள்)

**iii.** மேலே குறிப்பிட்டவற்றிலிருந்து ஏதேனும் **இரண்டு** (02) வகைகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு ஆசிரியர் வாசிப்பில் இயலாமையுள்ள ஒரு மாணவருக்கு எவ்வாறு உதவலாம் என்பதை விளக்குக.
(08 புள்ளிகள்)

12. **i.** வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் (Differentiated Instruction) என்ற எண்ணக்கருவை வரையறுத்து அதன் **மூன்று** (03) பரிமாணங்களை அடையாளப்படுத்துக.
(05 புள்ளிகள்)

**ii.** கற்றல் பாணிகளை (காட்சி, செவிப்புலன், இயக்கவியல்) உள்ளடங்கல் வகுப்பறைக்கான பாடத்திட்டமிடலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.
(08 புள்ளிகள்)

**iii.** எழுத்தறிவு அல்லது எண்ணறிவு பாடங்களுக்கான வேறுபட்ட கற்பித்தல் செயற்பாட்டினை உதாரணம் முன்வைத்து விளக்குக.
(07 புள்ளிகள்)

13. இவ்வினாவில் பகுதி **(அ)** அல்லது பகுதி **(ஆ)** இற்கு மாத்திரம் விடை தருக.

**அ. i.** ஒத்துழைத்துக் கற்பித்தல் (Collaborative Teaching) என்றால் என்ன? உள்ளடங்கல் வகுப்பறைகளில் பயன்படுத்தப்படும் அவற்றின் **மூன்று** (03) மாதிரிகளை பட்டியலிடுக.
(05 புள்ளிகள்)



87

**ii.** இணை கற்பித்தல் (Co – Teaching) மாதிரியில் ஆசிரியர்களின் பாத்திரங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** சகபாடிகள் மத்தியஸ்த (Peer – mediated) அறிவுறுத்தலின் சகபாடிப் பயிற்சி மற்றும் கூட்டுறவுக் கற்றல் (Peer tutoring and cooperative learning) ஆகியவற்றின் நன்மைகளை மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

**ஆ. i.** உள்ளடங்கற் கல்வியில் ஆசிரியர்களுக்குத் தேவையான மூன்று (03) தொழில்முறைசார் திறன்களை அடையாளப்படுத்துக.

(05 புள்ளிகள்)

**ii.** இலங்கை உள்ளடங்கல் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் மூன்று (03) முக்கிய சவால்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

**iii.** மேலே குறிப்பிடப்பட்ட சவால்களைச் சமாளிக்க தீர்வுகள் அல்லது உத்திகளை பரிந்துரைக்குக.

(07 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -



87